# உன் காயங்களை ஆற்றுவேன். எரே 30 : 17

**பக்தன் பாடுகிறார்**

காயப்பட்ட இருதயத்தை, கழுவி சுத்தப்படுத்தும்.
மாயை கொண்ட நெஞ்சை அது மயக்கம் இன்றி விடுக்கும்.
விசுவாசியின் காதில்பட, இயேசு என்ற நாமம்,
விருப்பாய் அவர் செவியில் தொனி இனிப்பாகுது பாசம்.
என் ஆண்டவா, என் ஜீவனே, என் மார்க்கமே முடிவே,
என்னால் வரும் துதியை நீரே, ஏற்றுக் கொள்ளும் தேவே –ஆமென்.

ஆம், சகோதரனே சகோதரியே

பக்தனின் உள்ளத்திலிருந்து எழும்பும் பாடலில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். இந்த மாதத்தில் அடிக்கடி இந்தக் கவியை பாடுங்கள். ராகம் தெரியாதவர்கள், தெரிந்தவர்களிடம் கற்றுக் கொள்ளுங்கள்.

**மெய்யாகவே, தேவன் உங்கள் காயங்களை ஆற்றுவார்.**

**உங்கள் காயங்களை ஆற்றுவதற்காகவே, இயேசுகிறிஸ்து சிலுவையிலே காயப்பட்டார்.**

உங்கள் காயங்கள் ஆற, சிலுவையை நோக்கிப் பாருங்கள்.

**பக்தன் பாடுகிறார்,**

சிலுவை நோக்கிப் பார்த்த கண்கள்,
சூழ்நிலைகள் மாறினாலும், வெட்கமடைந்து போவதில்லை – என்பதாக ஆமென்.

ஆம் சகோதரனே, சகோதரியே,

நீ வெட்கமடைந்து போவதில்லை. – அல்லேலுயா.

**வேதம் சொல்லுகிறது;**

சிங்கக் குட்டிகள் தாழ்ச்சியடைந்து, பட்டினியாயிருக்கும், கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது

**யோபு சொல்கிறார்.(5:18)**

அவர் காயப்படுத்தி, காயங்கட்டுகிறார். அவர் அடிக்கிறார், அவருடைய கை ஆற்றுகிறது – என்பதாக.

**ஓசியா கூறுகிறார் 6:1 :** நம்மைப் பீறினார், அவரே நம்மைக் குணமாக்குவார். நம்மை அடித்தார், அவரே நம்முடைய காயங்களைக் கட்டுவார்

**சங்கீதம் 147 : 3.** இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குகிறார். அவர்கள் காயங்களைக் கட்டுகிறார் – என்பதாக.

**ஆம் சகோதரனே, சகோதரியே,**

நம்முடைய மீறுதல்களினிமித்தம், அவர் காயப்பட்டு, நம்முடையஅக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்கு சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். **ஏசாயா 53:5.** கர்த்தருடைய வசனத்தை வாஞ்சையோடு வாசிக்கும் அன்பரே,

**கண்கலங்க வேண்டாம்.** உங்கள் துக்கம் மகா கொடிது என தேவன் அறிவார்.

ஏன் எனக்கு இந்த காயங்கள் என சிந்திக்க வேண்டாம் ? உங்கள் உள்ளம் ஒரு உடைந்த மண்பானை என்பதை தேவன் அறிவார். உங்கள் ஊழியங்களையும் அன்பின் பிரயாசங்களையும் தேவன் அறிவார்.

ஏன், ஏன் என்றே சிந்திக்கிறீர்களா ? வேண்டாம், வேண்டாம் சிந்தனைக்கு விட வேண்டாம்.

**மத்தேயு 6 : 27–ல் இயேசு சொன்னார்.**

கவலைப் படுகிறதினாலேயே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான் என்பதாக.

என் அன்பு சகோதரனே, சகோதரியே,

**தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக் கேதுவாகவே நடக்கிறது** – அல்லேலுயா.

**1 தெச. 5 : 18. :** எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யுங்கள். அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது

என் அன்பு சகோதரனே, சகோதரியே, கண் கலங்காதேயுங்கள். உங்கள் கண்ணீரைத் தேவன் துடைக்க வந்துவிட்டார். உன்னை விசாரிப்பாரற்ற சீயோன் என்று சொல்லி, உனக்கு தள்ளுண்டவள் என்று பெயரிட்டபடியால், நான் உனக்கு ஆரோக்கியம் வரப்பண்ணி, உன் காயங்களை ஆற்றுவேன் என்று கர்த்தர் சொல்கிறார்.

இதோ, நான் யாக்கோபுடைய கூடாரங்களின் சிறையிருப்பை திருப்பி, அவன் வாசஸ்தலங்களுக்கு இரக்கம் செய்வேன். நகரம் மண் மேட்டின் மேல் கட்டப்பட்டு, அரண்மனை முன் போல நிலைப்படும். அவைகளிலிருந்து ஸ்தோத்திரமும், ஆடல்பாடலின் சத்தமும் புறப்படும். அவர்களை வர்த்திக்கப் பண்ணுவேன். அவர்கள் குறுகிப் போவதில்லை. அவர்கள் முன்போல் இருப்பார்கள். அவர்கள் சபை எனக்கு முன்பாக விடப்படும். அவர்களை ஒடுக்கின யாவரையும் தண்டிப்பேன்–ஆமென்.